
ලංකා ජලනි


லங்கா ஜலனி

Lanka Jalani

# காலநிலை மாற்றம்

## உங்களை எவ்வாறு பாதிக்கின்றது?




நீர் நெருக்கடி
நீர் வட்டத்தில் சுழலும் நீரின் அளவு மாறிலியாக இருத்தல்
நீரிற்கான கேள்வி அதிகரித்தல்
நீர் மாசடைதல்
காலநிலை மாற்றமடைதல்
சனத்தொகை அதிகரித்தல்
வாழ்க்கைச் செயற்பாடுகளின் வளரச்சி
இயற்கைச் செயற்பாடுகள்

உரு 2

**காலநிலை - அறிமுகம்**

காலநிலை என்பது வெப்பநிலை, மழைவீழ்ச்சி, ஈரப்பதன், வளியமுக்கம், காற்று, காற்றின் வேகம் ஆகிய அன்றாட வானிலை நிலைமைகளின் நீண்டகாலச் செயற்பாட்டின் சராசரிச் சூழல் நிலைமையாகும்.

காலநிலைச் செயற்பாடு பல்வேறு பௌதிக மற்றும் மானிட விடயங்கள் தொடர்பில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன், வானிலை குறித்தும் பௌதிக மற்றும் மானிட நிகழ்வுகளிலும் செல்வாக்குச் செலுத்தும். அதன் படி காலநிலைக்கும் மனிதனுக்கும் இடையில் அன்னியோன்னியமான நிலைப்பாடு உள்ளது என்பது தெளிவாகின்றது.

காலநிலை மற்றும் சூழல் நிலைமைகளின் கீழ் மனிதனின் சமூக மற்றும் கலாசார நடவடிக்கைகள் கட்டியெழுப்பப்படுகின்றன.

பூகோள வலயமொன்றின், நாடொன்றின், பிரதேசமொன்றின் காலநிலை நிலைமைகளுக்கு இணங்க பொருளாதார, சமூக நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமையால் காலநிலை மாற்றங்கள் மனிதனினதும் சூழலினதும் நிலைப்பாட்டிற்கு தடையாக அமையும்.

**காலநிலை மாற்றத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கின்றதா?**

உலகின் எல்லா புவிக்கோள வலயங்களிலும் கடந்த 20 வருடங்களிலும் காலத்தினுள் காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அதற்கான காரணிகளாவன,

- 1905 முதல் 2005 வரையிலான நூறு வருடங்களுள் வளிமண்டல வெப்பநிலை $0.11^0C$ முதல் $0.74^0C$ வரை பெறுமானமொன்றினால் எல்லா வலயத்திலும் வெப்பநிலை அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரத்தின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

- 1966இன் பின்னர் வருடாந்த வெப்பநிலை அதிகரிக்கும் வேகம் இருமடங்காகக அதிகரித்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

- அவ்வாறே வருடாந்தம் சமுத்திர வெப்பநிலையும் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைவதுடன், அதற்கு ஆதாரமாக துருவப் பிரதேச கடற் பனிப்பாறைகள் கரைதல் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

- மழைவீழ்ச்சியின் அடர்த்தி மற்றும் தீவிரம் உயர்வடைந்துச் செல்லல்.

- வருடாந்தம் மழைவீழ்ச்சி கிடைக்கும் நாட்களின் எண்ணிக்கை குறைவடைதலும் மழைவீழ்ச்சி அடர்த்தி (அளவு) அதிகரித்தலும் புள்ளிவிபரத்தின் மூலம் நிருபனமாகியுள்ளன.

- பருவங்களின் படி காலநிலை மாற்றங்களின் விசேடங்கள் குறைவடைந்துக் கொண்டிருக்கினறன.

**காலநிலை மாற்றங்களில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகள் இரு வகைப்படும்.**

இயற்கையான காரணிகள்
மானிடக் காரணிகள்

**இயற்கையான காரணிகள்**

1. சூரிய கதிர்களின் அளவு மாற்றமடைதல்
2. புவியின் பயணப்பாதை / சூரியனின் சுற்றுப் பாதை மாற்றமடைதல்
3. பச்சைவீட்டு விளைவில் தாக்கம்

**மானிடக் காரணிகள்**

1. பச்சைவீட்டு விளைவுச் செயன்முறையின் வினையூக்கப்படுத்துகை (தொழில்நுட்பமயமாதல், படிம எரிபொருள், இரசாயனப் பொருட்கள் வெளிப்படுகை)
2. அதிகரித்த மற்றும் முறையற்ற நிலப் பயன்பாடு
3. அழிவிற்குள்ளாகும் சூழற்றொகுதி ஆக்கிரமிப்பு
4. மனித செயற்பாடுகளின் மூலம் வளிமண்டலத்திற்குள் இரசாயன மற்றும் தூசுத் துணிக்கைகள் சேர்தல்

**காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள்**

காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் பரஸ்பரம் ஒன்றின் மீது ஒன்று தங்கியிருப்பினும் அப்பாதிப்புக்களை நேரடி மற்றும் மறைமுகப் பாதிப்புக்கள் என வகைப்படுத்தலாம்.

**நேரடிப் பாதிப்புக்கள்**

- மழைவீழ்ச்சியில் மாற்றமேற்படல்
- வெப்பநிலை அதிகரித்தல்
- கடல் நீர் மட்டம் உயர்தல்
- வெள்ளம் மற்றும் கடும் காற்று
- உட்கட்டமைப்பு வசதிகள் அழிதல்
- மனித உயிர்களும் சொத்துக்களும் அழிதல்

**மறைமுகப் பாதிப்புக்கள்**

- விவசாய உற்பத்திகள் மற்றும் விளைபயன் வீழ்ச்சியடைதல்
- உணவுப் பாதுகாப்பு குறித்து சிக்கல்
- அதிகமாக ஆவியாதல்
- உவர்த்தன்மை அதிகரித்தல்
- கிளேசியர் மற்றும் பனிப்பாறைகள் உருகுதல்
- சிறு தீவுகள் சமுத்திரத்தினுள் மூழ்குதல்
- கரையோர தாழ்நிலங்கள் மூழ்குதல்
- நீர் வழங்குகை மட்டுப்படுத்தப்படல்
- போசனை மட்டம் குறைவடைதல்
- சுகாதாரம் மற்றும் சுகநலம் கெடுதல்
- சூழற்றொகுதி அழிதல்

**காலநிலை மாற்றங்களினால் சவாலுக்கு முகங்கொடுக்கும் முக்கிய குழுக்கள்**

1. ஏழை மக்கள்
2. சிறிய அளவில் விவசாயஞ் செய்வோர் (சிறு விவசாயிகள்)
3. சிறிய அளவில் மீன்பிடிப்போர்
4. சிறு பிள்ளைகள்
5. வன விலங்குள் மற்றும் சூழற்றொகுதிகள்

**காலநிலை மாற்றங்கள் காரணமாக உடனடியாக மற்றும் துரிதகதியில் அழிவிற்குள்ளாகும் இயற்கை வளங்கள்**

1. நன்னீர்
2. விவசாய நிலங்கள்
3. சூழற்றொகுதிகள்

இயற்கையினால் உயிரினங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படையான கொடை நீர் எனக் கருதப்படுகின்றது. நீர் உலகின் உயிர்நாடி எனக் கருதப்படுவதும் அதனாலேயே. புவி மேற்பரப்பில் வாழும் மனித இனம், மிருகங்கள், மரஞ்செடி கொடிகள் மற்றும் சூழற்றொகுதி ஆகிய எல்லாவற்றினதும் வாழ்க்கை மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் நீர் நேரடிச் செல்வாக்கினைச் செலுத்தவதுடன், மழைவீழ்ச்சி பூமியிற்கு நன்னீரைப் பெற்றுக் கொடுக்கும் வழிமுறையும் ஆகும். மழை ஏற்படுதல் மற்றும் அதன் மூலம் நீர் கிடைத்தல் சுழற்சி முறையில் நடைபெறுவதனால் அது நீர் வட்டம் என அழைக்கப்படும்.

2. உரு

**நீரின் பொது இலட்சணங்கள்**

1. நீர் கோளத்தினுள் உள்ள பயன்பாட்டிற்கு எடுக்கத்தக்க நீரின் அளவு மாற்றமடையாது.
2. நீரினைப் பயன்படுத்தவதனால் முடிவுறாது.
3. அது மாறும் இயல்பினைக் கொண்டுள்ளதுடன், இயைபாகவே/ சுழல் முறையில் தூய்மையாகும்.

**நீர் கோளத்தின் அமைப்பு**

1. உவர்நீர் 96.5%
2. பனிக்கட்டி மற்றும் கிளேசியர் 1.75%
3. நிலக்கீழ் நீர் 1.39% (உவர்நீர் நன்னீர் கலந்த)
4. நன்னீர் 0.36%
5. உறைபனி 0.001%
6. நீராவி 0.001%

ஏறத்தாழ 3.5% வீத அளவில் நன்னீராக இருப்பினும் மனிதனுக்கும் சூழலிற்கும் பயன்படுவது 01%ஐயும் விடக் குறைவான வீதமாகும். அவ்வளவானது மாறிலியாகக் காணப்படுகின்றது. நேரடி மற்றும் மறைமுகத் தரப்பினரும் நீரின் பால் தங்கியிருப்பதனால், அதனைப் பெற்றுக் கொள்வதற்கான போட்டியில் ஈடுபடுகின்றனர். காலநிலை மாற்றங்களினால் மேற்படி நீர் வட்டத்தின் செயன்முறையினால் மழையாகப் பூமியில் விழும் நீரின் அளவு, காலம், காலப்பகுதி மற்றும் இயல்பு மாற்றம் என்பன நீரினைப் பகிர்ந்துக் கொள்வதில் சிக்கலை ஏற்படுத்துகின்றது. அவ்வாறே, காலநிலை மாற்றங்களினால் மண்ணின் ஈரழிப்புத் தன்மை குறைவதாலும்

சூழல் வெப்பமடைவதாலும் வரட்சியான நிலைமை ஏற்படுமாயின் நீர் வழங்குகை மட்டுப்படுத்தப்படுவதனால் குழப்ப நிலையொன்று ஏற்படலாம். இவ்வாறாக நீரிற்கான கேள்வியினை முதன்மைப்படுத்தி போட்டிமிக்கதாகச் செயற்படுவதன் மூலம் மேலும் பயன்படுத்தவதற்கு முடியுமான நீரின் அளவு மற்றும் தரம் என்பன குறைவடையலாம்.

## இலங்கையின் நீர் சாத்தியவளம்

உலக நீர் நிலைமையுடன் ஒப்பிடுகையில் இலங்கை உயர் நீர் சாத்தியவளம் கொண்ட ஒரு நாடாகும். இலங்கை அயனமண்டலப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஒரு தீவு என்பதால் ஆண்டு முழுதும் மழைவீழ்ச்சி கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ கிடைக்கின்றது. அவ்வக் காலநிலை வலயங்களிற்கு வருடாந்தம் 700 மிமி. முதல் 5500 மிமி. வரை மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. அதன்படி இலங்கைக்கு வருடாந்தம் 43000 கனமீற்றர் மில்லியன் கணக்கான அளவில் மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. அதில் 12000 கனமீற்றர் மில்லியன் கணக்கான அளவு நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக எடுக்கப்படுவதுடன், குடிநீராகவும் வீட்டுப் பாவனைக்காகவும் 3000 கனமீற்றர் மில்லியன் கணக்கான அளவு பயன்படுத்தப்படுகின்றது. கைத்தொழில்களுக்காக அதற்கு சமமான அளவு பயன்படுத்தப்படுவதுடன், மீதமானது சூழலுக்கூடாக கடலுக்கு வழிந்தோடும். அதன்படி தனிநபர் பாவனைக்காக நீர் 2260 கன மீற்றர் அளவில் உரித்தாகினும், பிரதேச ரீதியாகக் காணப்படும் வேறுபாடுகள் மற்றும் ஏனைய காரணங்களினால் மேற்பரப்பு நீர் பரம்பலில் பாரிய இடைவெளியொன்று காணப்படுவதை அவதானிக்கலாம்.

## காலநிலை மாற்றங்களுக்கு முகங் கொடுத்தல்

காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்கு பின்பற்றவேண்டிய வழிமுறைகள் இரண்டு இனங்காணப்பட்டுள்ளன.

1. மனித செயற்பாடுகளினால் வளிமண்டல வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்பினை குறைவடையச்செய்தல்.

2. தற்போதுள்ள காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றலை விருத்தி செய்து கொள்ளல்.

மனித செயற்பாடுகளைக் காரணமாகக் கொண்டு வளிமண்டலம் வெப்பமடைதலைத் தடுப்பதற்கு ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொழில்நுட்ப மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளினால் வளிமண்டலத்திற்குள் வெளிவிடப்படும்

பாதகமான வாயுக்களை மட்டுப்படுத்தவதற்காக பாவனையைக் குறைத்தல் மற்றும் தொழில்நுட்பத்தினை மேம்படுத்துதல் (தொழில்மயமாக்கலினால் 16.8% உம், போக்குவரத்தினால் 14% உம், பேரளவு விவசாய நடவடிக்கைகளினால் 12.5%உம் சுரங்கத் தொழில் நடவடிக்கைகளினால் 11.3%உம், படிம எரிபொருள் தகனத்தினால் 10%உம் மின்வலு தொழிற்சாலை நடவடிக்கைகளினால் 21.3%உம், கழிவுப் பொருட்களை வெளியேற்றல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளினால் 13.7%உம் வளிமண்டலத்தினுள் பாதகமான வாயுக்கள் வெளிவிடப்படுகின்றன.) (CFC, CO2, CH4 N2O)

## காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடைதல்

காலநிலை மாற்றங்களின் விளைவாக பாதகமான வாயு வெளியேற்றத்தினை ஓரளவு மட்டத்திற்கு மட்டுப்படுத்தப்படினும் இயற்கையான காரணங்களினால் ஏற்படும் வளிமண்டல வெப்பமடைதலும் அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளை தடுப்பதற்கு முடியாதுள்ளமையால் நிலவும் காலநிலை மாற்றங்களுக்கு இசைவாகச் செயற்படுதல் நடைமுறைமிக்கது என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும். இதற்காக புதிய விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான முறைமைகள் போன்றே பாரம்பரிய அறிவையும் இயற்கையின் வரையறைகளையும் இனங்கண்டு செயற்படுதல் அவசியமாகும்.

## காலநிலை மாற்றங்களைத் தடுப்பதற்கு மேற்கொண்டுள்ள வழிமுறைகள்

காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்காக சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் ஏற்கனவே ஒன்றிணைந்த வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 1992ஆம் ஆண்டில் டப்ளின் மகாநாடும் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 1994ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்கான சமவாயமும் மிகவும் முக்கியமான திருப்புமுனைகளாவதுடன், 2002 கியோத்தோ சமவாயமும் இதன் மற்றொரு அடியெடுப்பாகும்.

## காலநிலை பாதிப்புக்களைக் குறைப்பதற்காக இலங்கை இதுவரையில் எடுத்துள்ள நடவடிக்கைகள்

1. நிறுவன ரீதியான வழிமுறைகள்
2. செயற்றிட்ட ரீதியான வழிமுறைகள்

## நிறுவன ரீதியான வழிமுறைகள்

1. மொறட்டுவை மற்றும் பேராதெனியாவில் 2002ஆம் ஆண்டில் ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவுதல்

2. 1980, 1988, 2000ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட சுற்றாடல் சட்டங்களில் நீர்வள முகாமைத்துவம் தொடர்பில் சட்டதிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

3. 2010 மகிந்த சிந்தனை ஹரித்த லங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரன்தொர தேசிய நிகழ்ச்சியின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியும் நீர்ப்பாசன அபிவிருத்தியும், 2012 'எப்போதும் எல்லோருக்கும் நீர்' என்ற கருப்பொருளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களும், தேசிய பௌதிகத் திட்டமிடல் கொள்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் காலநிலை மாற்றகளினால் நீர் வழங்கலில் ஏற்படும் தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், செயற்பாட்டுப் பிரிவு பலவீனமான மட்டத்தில் காணப்பட்ட போதிலும் நீர் வழங்கல், தரம், வடிகாலமைப்பு மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகள் குறித்து ஏறத்தாழ 50 சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், ஏறக்குறைய 30 நிறுவனங்கள் செயற்படுகின்றன.

மேலும் புதிய நீர்ப்பாசன செயற்றிட்டமாக மொறகஹகந்த, களுகங்கை, வெஹெரகல, மகஓய, கெக்கிரிஓபொட, தெதுறுஓய போன்ற பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பல நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

விவசாயத் திணைக்களம் இது வரையில் வறட்சி, உவர்த்தன்மை, நோய்ப் பீடைத் தொல்லைகள் ஆகியவற்றைத் தாங்கக் கூடிய குறைந்த வயது நெல் பேதங்கள் சிலதையும் தோட்டப் பயிர்கள் மற்றும் காய்கறிகள் சிலதையும் வெளியிட்டுள்ளது. (கௌப்பி, உளுந்து, பயறு, சோளம், சோயா போஞ்சி போன்றன)

நீர் வினைத்திறனை அதிகரிப்பதற்காக குறைந்தளவில் நிலத்தினைத் தயார்படுத்தல், ஈர மற்றும் உலர் பயிர்ச்செய்கை முறை, செறிவூட்டப்பட்ட மண்ணில் பயிர்ச்செய்கை, பாரசூட் முறை பயிர்ச்செய்கை என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நெல், தோட்டப் பயிர்கள், தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் ஏற்றுமதிப் பயிர்கள் தொடர்பில் 6 ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் வறட்சிக்கு, கடும் மழைக்கு மற்றும் பீடைத் தொல்லைகளுக்கு ஒத்துபோகக்கூடிய பயிர் வகைகளும் பயிர்ச்செய்கை முறைகளும் இனங் காணப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக பாசன நீர் மற்றும் குடிநீர் தேவைகளுக்காக கீழ்வரும் புது தொழில்நுட்ப முறைமைகளின் பாவனை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

1. மழை நீரைச் சேகரிக்கும் திட்டம்
2. கிராமிய குளங்களைப் புனரமைத்தல்
3. பாசன நீர் வினைத்திறனை அதிகரித்தல்
4. மட்காப்பு மற்றும் நீர்க்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
5. மேற்பரப்பு வழிந்தோடும் நீரைச் சேகரிப்பதற்காக வீட்டுத் தோட்டங்களில் குட்டைகளை அமைத்தல்
6. குழாய் கிணறு மற்றும் பயிர்ச்செய்கைக் கிணறு (சூரிய சக்தியினால் செயற்படுத்துதல்)

காலநிலை வேறுபாடுகள் குறித்து பொதுமக்களை விழிப்பூட்டும் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடையும் வேலைத்திட்டங்கள் அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களினால் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## நீரைப் பயன்படுத்தும் உங்களது பொறுப்பு

நீரைப் பயன்படுத்துவோராக நீர் வட்டத்தில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நாமும் நீர் முகாமையாளர்களாக இருக்கிறோம்.

அதனால்,

- ♦ எதிர்கால நீர் பிரச்சினை குறித்து தெளிவான அறிவையும், புரிந்துணர்வையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

- ♦ பெற்றுக் கொண்ட அறிவினை ஏனையோருக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு செயற்படுதல் வேண்டும்.


- ♦ எதிர்கால நீர்ப் பாவனையைத் திட்டமிடும் போது செயற்படு பங்காளராக இருத்தல் வேண்டும்.

- ♦ தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குதல் வேண்டும்.

- ♦ நீர்ப் பிரச்சினைக்கு முகங் கொடுப்பதற்காக மாற்று வழிமுறைகளை மேற்கொள்ளும் போது முன்னணியில் இருத்தல் வேண்டும்.

- ♦ நீரினைச் செல்வத்தைப் போன்று பாதுகாப்பதற்கு முன்னின்று செயற்பட வேண்டும்.

# பேண்தகு
# நீர் முகாமைத்துவத்திற்கு




- நீர் மட்டுப்படுத்தப்பட்டதும் ஆபத்திற்கு உள்ளானதுமான வளமாகும். அதனை முறையாக முகாமைப்படுத்துதல் பயன்படுத்துவோரது பொறுப்பும் கடமையுமாகும்.

- நீர் வள அபிவிருத்தியின் போதும் முகாமைத்தவத்தின் போதும் பொறுப்பாளர்களைப் போன்றே பயன்படுத்துவோரும் சம்பந்தப்படுதல் வேண்டும். நீரினைப் பயன்படுத்தும் போது எல்லா பிரிவுகளிலும் நீர்த் தேவைகள் நிறைவேறும் விதத்தில் ஒன்றிணைந்து முகாமைத்துவஞ் செய்தல் வேண்டும்.

- பெண்களின் அடிப்படை வகிபங்கு நீருடன் பின்னிப்பிணைந்த உள்ளமையால் அவர்களது பங்குபற்றலும் பங்களிப்பும் முக்கியமானதாகும்.

- நீர் ஓர் அடிப்படை தேவை என்பதுடன், அதற்கு பெரும் பொருளாதார பெறுமதியும் உள்ளது என்பதை மறத்தலாகாது.

## நீர் வளம் குறித்து எமது நிலைப்பாடு

- இலங்கை நீர்க் கூட்டணி, நீர் வளம் நாட்டிற்கும் மக்களுக்கும் உரிய இயற்கையான சொத்தாகக் கருதுவதுடன், சில நாடுகளில் அதன் முகாமைத்துவத்தில் பல்தேசிய நிறுவனங்களின் தலையீட்டினைக் கடுமையாகக் கண்டிப்பதுடன் அவ்வாறான தலையீடுகளினால் பொது மக்களின் நீர் உரிமை இல்லாதொழியும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- அதன் படி, ''பூமி அனைத்து மக்களுக்கும் மற்றும் உயிரினங்களுக்கும் உரித்தாவதுடன், அரசு அதன் பொறுப்பினை ஏற்றுள்ளது'' (மகாவமிசம் கி.மு. 223) என்ற வாசகத்தின் படி மானிட வர்க்கத்தினரும் சுற்றாடலும் ஆகிய இரண்டினையும் போற்றுகின்றது. எல்லா உயிரினங்களினதும் பயன்பாட்டிற்காக, நீர் வளத்தை பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டிய சொத்தொன்றாக அரசு கருதுகின்றது.

- இலங்கை நீர்க் கூட்டணி ஒன்றிணைந்த நீர் மூலங்கள் முகாமைத்துவ செயன்முறையினை ஊக்குவிப்பதற்கு அர்ப்பணிப்புடன் பணிபுரிவதுடன், சுற்றாடல் நேயமிக்க சமநிலையான சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக நாட்டின் நீர் வளத்தினை பேண்தகு முறையில் பயன்படுத்தும் மற்றும் போற்றும் சமூகமொன்றினை இலக்கு வைத்து செயற்படுகின்றது.

- குடிப்பதற்கும் ஜீவனோபாயத்திற்கும் வழிகோலும் நீரிற்கு முதலிடம் வழங்குவதுடன், அடிப்படை மனித தேவைகளுக்கு அவசியமான நீரினைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தியவாறு நீர் மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்று என ஏற்றுக்கொள்கின்றது.

- குடிநீர், அதனை வழங்கும் மூலங்களைப் பாதுகாப்பதுடன், நீர்ப்பாசன விவசாய நெற் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்காக நீரைப் பெற்றுக் கொடுத்தல் நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பிற்கு அவசியமானது என வலியுறுத்துகின்றது.

- பாரம்பரிய நீர் முகாமைத்துவ நுட்பங்களை புதுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பேணுதல் வேண்டும் என அறிந்துள்ளது.

- பலவீனமான சமூக மற்றும் சுற்றாடல் ரீதியான நடத்தைக் கோலத்தினால் பொதுமக்கள் நலனிற்கு, சூழலிற்கு, ஆரோக்கியத்திற்கு, ஜீவனோபாயத்திற்கு அச்சுறுத்தலாக உள்ள நீரின் தரம் குறைதல் குறித்து கவலைப்படுவதுடன், அதனை இல்லாதொழிப்பதற்கு அனைத்து தரப்பினரினதும் ஆதரவு எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஒன்றிணைந்த நீர்வள முகாமைத்துவத்திற்கு நிறுவனக் கட்டமைப்பொன்றினை ஏற்படுத்தும் போது எல்லா தரப்பினரினதும் பங்களிப்புடன் தீர்மானிக்கும் போது வெளிப்படைத்தன்மை, சமத்துவம் மற்றும் பெண்கள் உரிமை ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில் அதனை நிறைவேற்றுவதற்குத் துணைபுரியும்.

- நீர் வளத்தின் பொறுப்பாளராக பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையொன்றினை வழங்குவதற்காக நீர் மற்றும் அதன் முகாமைத்துவத்திற்கு மாகாண நிர்வாக நிறுனங்கள், பொதுமக்கள் அமைப்புக்கள், தனியார் துறைக்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உரிய அதிகாரம் பன்முகப்படுத்துவதற்கும் சாட்டுவதற்கும் இலங்கை நீர் கூட்டணி ஆதரவை வழங்குகின்றது.

- சந்ததிகளுக்கு இடையே சமத்துவத்தினை மதிப்பளிப்பதுடன், அவ்விலக்கினை நோக்கிச் செல்வதற்கு சிறந்த நீர் நிர்வாகம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**இலங்கை நீர்க் கூட்டணி**
127, சுனில் மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்லை.
தொலைபேசி- 94-11-2880000
தொலைநகல்- 94-11-2786854
மின்னஞ்சல்- slnwp@cgiar.org
வலைத்தளம்- www.lankajalani.org